1973 பிப்ரவரி 13]

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : இவைகளையெல்லாம் பரிசீலனை செய்து தான் செய்தோம் என்று நான் முதலிலே குறிப்பிட்டேன். ஊராட்சி ஒன்றியங்கள் மூலம் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு, அவைகள் அரசுக்கு வந்து, வேளாண்மைத் துறை மூலம் பரிசீலனை செய்யப்பட்டு, மருந்து தெளிக்கப்பட்டு வருகிறது. புகார்கள் வந்தது பற்றி மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிட்டார்கள். பொதுவாக 'என்னுடைய நிலத்தில் நான் இன்னும் பயிர் செய்யவில்லை. என்னுடைய நிலத்தில் ஒரு பகுதியிலே வாழை இருக்கிறது, ஒரு பகுதியிலே கரும்பு இருக்கிறது. ஆனால், மொத்தமாக தெளித்துவிட்டு, எல்லோருக்கும் சேர்த்து நெல் விவசாயிகளிடம் வசூல் செய்கிறார்கள் என்ற குறைபாடு வந்தது. அவைகளையெல்லாம் பரிசீலித்த பிறகு அது நிறுத்தப்பட்டுவிட்டது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். உற்பத்தி அளவைப் பற்றி சொன்னார்கள். 58 லட்சம் டன் உற்பத்தியிலிருந்து சென்ற ஆண்டு 73 லட்சம் டன் உற்பத்தி அதிகமாகச் செய்யப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஏ. எம். இராஜா : தலைவர் அவர்களே, சில விவசாயப் பெருங்குடி மக்களிடமிருந்து புகார்கள் வந்ததன் பேரில் விமானம் மூலம் மருந்து தெளிப்பது நிறுத்திவைக்கப்பட்டிருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் குறிப் பிட்டார்கள். அதற்கு மாறாக கிரௌண்டு ஸ்ப்ரேயர் மூலம் மருந்து தெளிக்க ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாகவும் தெரிவித்தார்கள். கிரௌண்டு ஸ்ப்ரேயர் மூலம் மருந்து தெளிப்பதில் அந்த நோயை அறவே போக்கிவிட முடியாது. காரணம், ஒருவர் மருந்து அடிக்காவிட்டாலும் கூட அந்த நோய் பரவ வாய்ப்பு இருக்கிறது. சென்ற வருஷம் எங்கள் பகுதியில் கடலைப் பயிர் அது போல் அழிந்துவிட்டது. ஆகவே, யாருடைய புகாரையும் எதிர்பார்க்காமல், யாருடைய ஆதரவையும் எதிர்பார்க்காமல், அரசாங்கம் கண்டிப்பாக விமானம் மூலம் பூச்சி மருந்து தெளிப்பதற்கு வருங்காலத்தில் ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : இப்பொழுது கோவை மாவட்டத் திலிருந்தும், வேறு சில மாவட்டங்களிலிருந்தும் பூச்சி மருந்து ஆகாய விமானத்தின் மூலம் தெளிப்பதை நிறுத்தியது தவறு என்று எங்களுக்கு மனுக்கள் வந்துகொண்டிருக்கின்றன. அதாவது கம்பளிப்பூச்சியினால் வேர்க்கடலை அதிகமாகப் பாதிக்கப்படும். அதற்காக ஆங்காங்கு நாம் தீவிர திட்டத்தின் மூலம் எப்படியும் அடித்துத் தீரவேண்டும் என்று சொல்லி இந்த ஆண்டு 50,000 ஏக்கராவுக்கு திட்டமிட்டு, 22,000 ஏக்கருக்கு இதுவரையில் தெளிக்கப்பட்டிருக்கிறது. கனம் அங்கத்தினர் குறிப்பிட்டது போல ஒருவர் தெளிக்காமல் போனால் கூட, பூச்சி பரவிடும். இருந்தாலும், பெரும்பாலானவர்

களுடைய கோரிக்கையை ஏற்று, அது நிறுத்தி வைக்கப்பட்டது. இந்த ஆண்டு எப்படியும் வேர்க்கடலைக்கு தெளிக்கவேண்டும் என்று கேட்கிறார்கள். அதற்கு ஒரு லட்சம் ஏக்கருக்கு தெளிக்கலாம் என்ற குறிப்பு இருக்கிறது. இருந்தாலும், தீவிர திட்டத்தின் கீழ் அங்கெல்லாம் கிரௌண்டு ஸ்ப்ரேயர் களின் மூலம் தெளிப்பது என்று ஏற்பாடு செய்யப்பட்டு, இந்த ஆண்டு இப்பொழுது அவர்களிடம் விடப்பட்டிருக்கிறது. அதற்கு வேண்டிய அதிக மான ஸ்ப்ரேயர்களை வாங்கிக்கொடுப்பதற்கு அரசாங்கம் திட்டமிட்டு செயல் பட்டு வருகிறது. பழுதடைந்த ஸ்ப்ரேயர்களை பழுதுபார்ப்பதற்கும் தீவிர திட்டம் தயாரிக்கப்பட்டு, அதுவும் செயல்முறையில் இருந்துவருகிறது. எனவே, அப்படிப்பட்ட திட்டங்களை நிறைவேற்றுவதற்கு அங்கத்தினர்கள் முழு முயற்சி எடுத்துக்கொள்வார்கள் என்று நம்புகிறேன். அரசின் சார்பில் வேறு பல உதவிகளும் செய்வதற்குத் தயாராக இருக்கிறோம்.

திரு. கோ. இளங்கோவன் : விமான மூலம் பூச்சி மருந்து தெளிப்பதை நிறுத்தி வைத்திருக்கிறார்கள் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால், அதற்குரிய தொகை வசூலை நிறுத்திவைக்கவில்லை. நிறுத்தி வைக்க வேண்டும் என்றும் நான் சொல்லவில்லை. ஆனால் 2, 3 ஆண்டுக்கான தொகை களை ஒரே தவணையில் கட்டவேண்டிய தொல்லைக்கு விவசாயிகள் ஆளாகி யிருக்கிறார்கள் என்பதை உணர்ந்து 2, 3 தவணைகளில் வசூலிக்க அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : 1970-71, 1971-72-ம் ஆண்டுகளில் தெளிக்கப்பட்டிருப்பதற்கான இந்தத் தொகை வசூலுக்காக கெடுபிடி செய்யப் படவில்லை. 1961-ம் ஆண்டிலிருந்தே அப்படிப்பட்ட நிலைமை இருந்து வரு கிறது. விவசாயிகள் கொடுக்க முடியாது என்று சொல்கிறார்கள். நிலச் சொந்தக்காரர்கள், அதுவும் குறிப்பாக, தஞ்சை மாவட்டத்தில், உழுகின்ற விவசாயிகள்தான் கொடுக்கவேண்டுமே தவிர, தாங்கள் கொடுக்க முடியாது என்று அவர்கள் சொல்லிவருகிறார்கள். வழக்கு நீதிமன்றத்தில் இருக்கிறது. ஆகையினால் வசூல் நிறுத்தப்பட்டிருக்கிறது. 1970-71, 1971-72-ம் ஆண்டுகளைப் பொறுத்தது அல்ல இது. அதற்கு முன்னால் தெளிக்கப்பட்டு, வசூல் செய்யப் படாமல் இருக்கின்ற தொகை இது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். வழக்கு முடிந்தபிறகு அதுபற்றி பரிசீலனை செய்யப்படும்.

திரு. எம். சுரேந்திரன் : விமானம் மூலம் மருந்து தெளித்ததற்கு விவ சாயிகள் தரவேண்டிய பாக்கித் தொகை இருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள், வசூலில் கெடுபிடி செய்யப்படுகிறது என்று இன்னொரு உறுப்